# மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.
# පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, උතුරු පළාත.
# PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, NORTHERN PROVINCE.


මගේ අංකය / எனது இல. / My No : NP/07/10/02/Gen/2022

ඔබේ අංකය / உமது இல / Your No :

දිනය / திகதி / Date : 2022.04.29

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**<u>வடக்கு மாகாண பொதுச்சேவையில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் நடாத்துதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக,

வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தால் நடாத்தப்பட்ட சகல வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளுக்குமான சுற்றறிக்கைகள் உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட சகல அலுவலகங்களிற்கும் வன் பிரதிகளாக அனுப்பி வைக்கப்படும் நடைமுறை இதுவரைகாலமும் பின்பற்றப்பட்டுவந்தது.

எனினும் 2022.04.30ஆம் திகதிக்குப் பின்னர் குறித்த வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான சுற்றறிக்கைகளோ / அவற்றுக்கான திருத்தங்களோ வன் பிரதிகளாக அனுப்பி வைக்கப்படமாட்டாது என்பதுடன் அவை <u>www.np.gov.lk</u> என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மாத்திரமே தரவேற்றம் செய்யப்படும் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

எனவே விண்ணப்பதாரிகள் குறித்த இணையத்தளத்தின் ஊடாக காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களைத் தரவிறக்கம் செய்து தங்களின் திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் குறித்த தரத்திற்கு நியமிக்கப்பட்ட / பதவி உயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றினையும் இணைத்து விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக எமது அலுவலக முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

***<u>கவனிக்கவும்</u>*** **:- குறிப்பிட்ட தரத்திற்கு நியமிக்கப்பட்ட / பதவி உயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து குறித்துரைக்கப்படும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பதாரிகளது விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதோடு இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கோரிக்கைகளும் பின்னர் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.** ( இந்த நடைமுறையானது 2022.06.01ஆம் திகதியின் பின்னர் மேற்குறித்த இணையத்தள முகவரியில் வெளியிடப்படும் சகல வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளிற்குமான சுற்றறிக்கைகளிற்கும் பொருந்தும். )


(... / தயவு செய்து எனது தொடர்பு இலக்கத்தை தங்களது பதில் கடிதத்தில் குறிப்பிடவும்/ Please indicate my reference No. in your reply)

Secretary : 021-2219980
Asst. Secretary : 021-205 4190
A/O : 021-221 9938
Office : 021-2219981
Exam Unit : 021-221 9939

இல. 393/48,கோவில் வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்.
අංකය393/ 48,කෝවිල්පාර,නල්ලූර්,යාපනය.
No. 393/48, Temple Road, Nallur, Jaffna.

web : www.np.gov.lk
e-mail :admppscnp@gmail.com
exampscnp@gmail.com
finppscnp@gmail.com

மேலும் யாதாயினுமொரு தரத்திற்கு நியமனம் / பதவி உயர்வுக் கடிதத்தினைப் பெற்றுக்கொள்ளாது அத்தரத்திற்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தவறொன்றாகக் கருதப்படுவதோடு, அத்தகைய விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவர் சிபார்சு செய்வதனை முற்றிலும் தவிர்த்துக் கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றீர்கள்.

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்தும் குறித்த நியமன / பதவி உயர்வுக்கடிதங்கள் குறித்த உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படாதிருப்பதன் காரணமாக எவரேனுமொருவர் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்படின் குறித்த விடயம் தொடர்பில் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை வடக்கு மாகாணத்திற்கான இணையத்தளத்தினுள் கீழ்க்கண்ட முறையில் உள்நுழைவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

www.np.gov.lk ⟶ Exams & Recruitments ⟶ Advertisement

எனவே குறித்த விடயத்தினை தங்களது அமைச்சு / திணைக்களம் / அலுவலகத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதோடு இணையத்தளத்தின் மேற்குறித்த பகுதியில் நாளதுவரைப்படுத்தலுடன் செயற்பட்டு இவ் விடயம் தொடர்பில் கூடிய கரிசனை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

*சி.திருவாகரன்,*
*செயலாளர்.*

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

(පිළිතුරු සැපයීමේ දී මගේ යොමු අංකය සඳහන් කරන්න/ தயவு செய்து எனது தொடர்பு இலக்கத்தை தங்களது பதிற் கடிதத்தில் குறிப்பிடவும்/ Please indicate my reference No. in your reply)

Secretary : 021-2219980
Asst. Secretary : 021-205 4190
A/O : 021-221 9938
Office : 021-2219981
Exam Unit : 021-221 9939
Fax No : 021-221 9940

இல. 393/48.கோவில் வீதி.நல்லூர்,யாழ்ப்பாணம்.
අංකය393/ 48,කොවිල්පාර,නල්ලූර්,යාපනය.
No. 393/48, Temple Road, Nallur, Jaffna.

web : www.np.gov.lk
e-mail :admppscnp@gmail.com
exampscnp@gmail.com
finppscnp@gmail.com